எப்படி அறிவார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. ஸ்கேனை. நிறுத்துகிற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 47, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

47—

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் சார்பில் தொழில்நுட்பக் கல்லூரி திறத்தல்.

*3343— திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி கோபாலசமுத்திரத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தொழில் நுட்பக் கல்லூரி (Polytechnic) தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10–00

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பாலிடெக்னிக் ஒன்று அமைக்க முந்தைய சட்டமன்ற உறுப்பினர் பெரிதும் முயற்சி எடுத்து அதற்கான இடங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோதிலும் பின்னர் அது திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்டதாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அறிந்தேன். அதனால்தான் இதை வினாவாக சட்டமன்றத்திற்கு அனுப்பினேன். சேரன் மகாதேவி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அதில் கிடைத்த வெற்றி, எனக்குக் கிடைத்த வெற்றியல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவிக்குக் கிடைத்த வெற்றி. ஆகவே

1992 பிப்ரவரி 5]

அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சொந்தத் தொகுதியாக எண்ணி, எந்தக் கல்லூரியும் சேரன்மகாதேவி தொகுதியில் கட்டபொம்மன் கழக சார்பில் அமைக்கப்படாத காரணத்தால், அமைக்க இருக்கின்ற அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி என்னுடைய தொகுதிக்கு அதை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியில் கிடைத்த வெற்றி புரட்சித் தலைவிக்குக் கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்கள், தமிழகத்திலே கிடைத்திருக்கின்ற அத்தனை வெற்றிகளும் புரட்சித் தலைவிக்கு கிடைத்த வெற்றியே தவிர வேறு யாருக்கும் கிடையாது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஆகவே, சேரன்மகாதேவியைப் பொறுத்தவரையில் 30 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த நிலத்தை அவர்கள் தருவதற்குத் தயக்கம் காட்டிய காரணத்தால் அது பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் 30 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுப்பாரேயானால், அல்லது அந்த நிலத்தைக் கொடுக்க யாராவது முன் வருவார்களேயானால், அவர்கள் அதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முன்வருவார்களேயானால் 1992–93 ஆம் ஆண்டிலேயே பாலிடெக்னிக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. புது நயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உடனடியாகச் சென்று 30 ஏக்கர் அல்ல 50 ஏக்கர் நிலத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை இந்த நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தி, புரட்சித் தலைவியின் தொகுதியான சேரன்மகாதேவியை வளம்பெறச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஆண்டே செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக வருகின்ற நிதியாண்டிலேயே அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 30 ஏக்கர் வழங்கினால் சேரன்மகாதேவி தொகுதிக்கு மட்டும்தானா ? இல்லை தென்காசி தொகுதியிலும் 30 ஏக்கர் வழங்கினால் கல்லூரியை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சேரன்மகாதேவியைப் பொறுத்ததாகும். ஆகவே சேரன்மகாதேவிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 48. திரு. வி. கே. சின்னசாமி. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

48—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்,

*4885— திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பிரிக்கும் கழகத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தில்லைநாயகம் குழுவின் பரிந்துரையை ஏற்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்க அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

(ஆ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகிய இரண்டையும் பிரித்து காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் செயல்பட நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டிலேயே அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் உள்ளதா என்பது